# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை 06.12.2024 கதிர் 72







# துயிலும் இல்லங்களில் இருக்கும் இராணுவத்தை வெளியேற்றுங்கள்!

## - கன்னி உரையில் சத்தியலிங்கம் வேண்டுதல் -



**கொழும்பு, டிச 06**

**”பல நூற்றுக்கணக்கான இறந்தவர்களின் உடல் புதைக்கப்பட்ட துயிலும் இல்லங்களில் இருக்கும் இராணுவ முகாமகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்து உங்கள் நல்லெண்ணத்தை காட்டுங்கள். அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யுங்கள். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கு மனச்சாட்சியுடன் விடையை தேடுங்கள் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் ப. சத்தியலிங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**நாடாளுமன்றத்தில் இன்று தனது கன்னி உரையை ஆற்றிய போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.** 7 ➤

# அகற்ற உத்தரவு!



கொழும்பு, டிச 06

கொழும்பு - கோட்டை பகுதியில் கைவிடப்பட்ட 60 மாடி “கிரிஷ்” கட்டடத்திலிருந்து இடிந்து விழும் நிலையில் உள்ள ஆபத்தான பாகங்களை பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காத முறையில் இரண்டு வாரங்களுக்குள் அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு - கோட்டை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு, பாவனையின்றின் கைவிடப்பட்டிருக்கும் “கிரிஷ்” கட்டடம் தொடர்பான வழக்கு இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு கோட்டை நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கட்டடத்திலிருந்து எந்தவொரு பொருளும் கீழே விழாத வகையிலும், பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும் அவற்றை அகற்ற வேண்டும் என நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேநேரம், குறித்த கட்டுமானப் பொருட்களை அகற்றும் போது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய ஏதேனும் சூழ்நிலை உருவாகுமாயின் அதனைத் தவிர்க்கும் வகையிலான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் ”கிரிஷ்” கட்டட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நீதவான் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேநேரம் 55 நாள்களுக்குள் அவற்றை அகற்றுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்தப் பணிகளை இரவு நேரத்தில் வீதியைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் மேற்கொள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கட்டடத்துக்குச் சொந்தமான நிறுவனத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் குழாம் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (ஐ)

# அரசியலமைப்பு பேரவைக்கு சிறீதரன் தெரிவு!



கொழும்பு, டிச 06

அரசியலமைப்பு பேரவைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக இன்று காலை இடம்பெற்ற வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

இந்தத் தெரிவின் மூலம் அரசியலமைப்பு பேரவையில் செயற்படவுள்ள முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையையும நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பெற்றுக் கொண்டுள்ளார்.

அரசியலமைப்பு பேரவைக்குச் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான முன்மொழிவு கோரப்பட் வேளையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் சிவஞானம் சிறீதரனின் பெயரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற 7 ➤

# ‘பார் பெமிட்’ வருடாந்த கட்டணத்தை அதிகரிப்பதற்கு இடைக்காலத் தடை!

## - உயர்நீதி மன்றம் உத்தரவு -

கொழும்பு, டிச. 06

மதுபான விற்பனை அனுமதிப் பத்திரத்துக்கான வருடாந்த கட்டணத்தை அதிகரித்து கடந்த அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏ.எச். எம்.டி.நவாஸ், குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு இன்று வெள்ளிக்கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மதுபான விற்பனை அனுமதிப் பத்திர உரிமையாளர்கள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது குறித்துத் தீர்மானிப்பதற்காகக் குறித்த மனு நீதியரசர்கள் முன்னிலையில் இன்று ஆராயப்பட்டது. 7 ➤

# கோபா குழுவின் தலைமைப் பதவியை எதிர்கட்சிக்கு வழங்குவதற்குத் தீர்மானம்!

கொழும்பு, டிச.06

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா) வின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாக அவைத் தலைவரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கும் அதே நேரம் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், கோப் குழு எனப்படும் அரசாங்க பொறுப்புகள் மற்றும் முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் பதவி ஆளுங்கட்சிக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடந்த அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய 7 ➤

# தேர்தல் செலவு விவரங்களைக் நள்ளிரவுக்கு முன் கையளிக்குக!

## - ஆணைக்குழுத் தலைவர் கோரிக்கை -

கொழும்பு, டிச 06.

நவம்பர் 14 ஆம் திகதி நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் செலவு விவரங்களை வழங்குவதற்கான காலக்கெடு இன்று நள்ளிரவுடன் முடிவடைவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஈ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 1,985 பேர் மாத்திரமே இதுவரையில் தேர்தல் செலவு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர் என்றும், கட்சிகளின் தேசியப் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டிருந்த 527 பேரில் 57 பேர் மட்டுமே தமது தேர்தல் செலவு விவரங்களை வழங்கியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஈ.எல்.ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# தூக்கில் தொங்கிய பெண் கொலை எனச் சந்தேகம்!

## - கிளிநொச்சியில் சம்பவம் -





கிளிநொச்சி, டிச. 06

கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னைநீராவி நாதன் திட்ட கிராமத்தில் பெண் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மரணத்தில் சந்தேகம் கொண்டுள்ள பொலிஸார் சம்பத்தைக் கொலை என்ற கோணத்தில் விசாரித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் சந்தேகம் கொண்டுள்ள பொலிஸார், மரணமடைந்தவரின் மகனைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இன்று காலை சம்பவ இடத்துக்கு வருகைதந்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் இஸ்மாத் ஜெமில் சடலத்தைப் பார்வையிட்டு, மரண விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார். சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-113)

# அரசியல்வாதிகள், ஆடம்பரம் இல்லாமல் திறந்துவைக்கப்பட்ட ஹொக்கி ஆடுகளம்!

கண்டி, டிச. 06

மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள நந்திமித்திர எக்கநாயக்க சர்வதேச ஹொக்கி ஆடுகளம் எதுவித ஆடம்பர நிகழ்வுகளுமின்றி, குறிப்பாக அரசியல் வாதிகளின் பிரசன்னமின்றி அமைதியான முறையில் பொதுமக்கள் பாவனைக்கு நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெற்றின் ரூபா 110 மில்லியன் மற்றும் ஆசிய ஹொக்கி சம்மேளனத்தின் ரூபா 50 மில்லியன் நிதியுதவியுடன் விளையாட்டு அமைச்சு நந்திமித்திர எக்கநாயக்க சர்வதேச ஹொக்கி ஆடுகளத்தைப் புனரமைத்துள்ளது. செயற்கைப் புற்றரை ஆடுகளமாகப் புனருத்தாரணம் பெற்றுள்ள இவ் ஆடுகளம், சர்வதேச தரத்துக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட ஆடுகளத்தில் நேற்று 16 வயதுக்குட்பட்ட ஆண் - பெண் ஹொக்கிச் சுற்றுப்போட்டியின் முதலாவது ஆட்டத்துடன் எளிமையாகப் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் ஆடம்பரமின்றி, அழைக்கப்பட்ட விருந்தினர்கள் இன்றி, குறிப்பாக அரசியல்வாதிகள் எவரும் அழைக்கப்படாமல் இடம்பெற்ற முதலாவது ஆடுகளத் திறப்பு வைபவம் இது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ஜ-04)





# நாட்டை டிஜிற்றல் மயமாக்குவதற்கு அனைவரும் அணிதிரள வேண்டும்!

## - ஜனாதிபதி அநுரகுமார அழைப்பு -

கொழும்பு, டிச 06

அரசியல் அதிகாரத்தினதும், டிஜிட்டல் தொழிநுட்ப நிபுணர்களினதும் எதிர்பார்ப்புகள் ஒன்றாக இருக்கும் நிலையில், நாட்டை டிஜிட்டல் மயமாக்கும் செயற்பாட்டுக்கு அனைத்துத் தொழில் வல்லுநர்களினதும் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும், எந்த சந்தர்ப்பத்திலும் அதற்குத் தான் ஒத்துழைப்பாக இருப்பேன் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

டிஜிட்டல், பொருளாதார அலுவல்கள் அமைச்சராக நேற்று வியாழக்கிழமை பிற்பகல் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

டிஜிட்டல் மயமாக்கல் ஊடாகப் பொருளாதார நடவடிக்கைகளின் வினைத் திறனை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு வர முடியும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், வறுமையை ஒழித்தல், சமூக மனப்பாங்குகளை மாற்றுதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் என்பன அரசாங்கத்தின் பிரதான இலக்குகளாகும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமைச்சு அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், "கட்டிடங்களை நிர்மாணிப்பதனால் மாத்திரம் ஒரு நாடு அபிவிருத்தியடையாது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணத்துறை அமைச்சொன்று இருந்தது. ஆனால் தற்போது ஒவ்வொரு அமைச்சும் நிர்மாணப் பணிகளைத் தாங்களே மேற்கொண்டு வருகின்றன.

கடந்த வருடம் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் எவ்வித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. கட்டிட நிர்மாணங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் மாத்திரமே இடம்பெற்றது.

தொழில் அமைச்சுக்கு இரண்டு பாரிய கட்டிடங்கள் உள்ள போதிலும் இன்னும் மக்களின் வரிசை குறையவில்லை, அதற்கான தீர்வுகளை வழங்க டிஜிட்டல் மயமாக்கல் அவசியமானது" என்றார்.

மேலும், டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் 15 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அடுத்த ஐந்தாண்டுகளில் டிஜிட்டல் பணியாளர்களை இரண்டு இலட்சமாக அதிகரிப்பது, முழு நாட்டையும் டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பான செயல் திட்டத்தை எதிர்வரும் 5 வருடங்களில் செயல்படுத்துவது குறித்தும் இந்த நிகழ்வின் போது கவனம் செலுத்தப்பட்டது.

டிஜிட்டல் பொருளாதார பிரதியமைச்சராக பொறியியலாளர் எரங்க வீரரத்னவும் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.


ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண ஸ்ரீ தனபால, ஜனாதிபதியின் டிஜிட்டல் விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகரும், தகவல் தொழில்நுட்ப முகவராண்மையின் தலைவருமான ஹான்ஸ் விஜேசூரிய மற்றும் அமைச்சு அதிகாரிகள் உட்படப் பலர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஜ-05)







## 14 வயது சிறுமி கொடூர கொலை



14 வயது சிறுமி கொலை செய்து சடலத்தை நிர்மாணிக்கப்பட்டு வந்த கழிவறை குழியில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி முதல் தனது 14 வயது மகள் காணாமல் போயுள்ளதாக கம்பஹா, அகரவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் நேற்று (5) இரவு கம்பஹா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

பின்னர் நடத்திய விசாரணையின் இந்தக் கொலைக்கான அடிப்படைக் காரணத்தை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கொலையில் தனது இரண்டாவது கணவர் மீது சந்தேகம் இருப்பதாக சிறுமியின் தாய் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய முறைப்பாட்டாளரின் இரண்டாவது கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின்படி, சந்தேகநபர் சிறுமியைக் கொன்று, நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டின் பின்புறமுள்ள கழிவறை குழியில் சடலத்தை வைத்து கொங்ரீட் பலகையால் மூடியதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், கம்பஹா நீதவான் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளார்.

கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## மரக்கறிகள் விலை உயர்வு!

யாழ்ப்பாணம், டிச 06

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் மழை வீழ்ச்சியின் காரணமாக விவசாய நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி நாட்டின் பல பாகங்களிலும் மரக்கறிகளின் விலை உச்சந்தொட்டுள்ளன.

மழை மற்றும் வெள்ளம் காரணமாகப் பெரும்பாலான இடங்களில் பயிரழவு ஏற்பட்டுள்ளது. இதனால் சந்தைக்கு வரும் மரக்கறிகளின் அளவு குறைந்துள்ளதால் யாழ். மாவட்டத்துக்கு வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் மரக்கறி வரவும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேநேரம் யாழ். மாவட்டத்திலும் பரவலாக விவசாயிகள் நட்டமடைந்திருப்பதனால் மருதனார்மடம், திருநெல்வேலி, கொடிகாமம் போன்ற பிரதான சந்தைகளில் மரக்கறி விலை சடுதியாக அதிகரித்துள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சேர். பொன். இராமநாதன் குருபூசை







யாழ்ப்பாணம், டிச. 06

சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதனின் 94 ஆவது சிரார்த்த தின குருபூசை தின நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வையொட்டி பல்கலைக் கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள சேர். பொன். இராமநாதன், ஆறுமுக நாவலர் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து தீபாராதனை இடம்பெற்றது.

தொடர்ந்து பல்கலைக்கழகப் பேரவை மண்டபத்தினுள் சிரார்த்த தின குருபூசை தின நிகழ்வு இடம்பெற்றது. துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடந்த இந் நிகழ்வில் பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் சைவ சமய அபிமானிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## பார் பெமிட் விவகாரத்துக்கு அடுத்த வாரம் விளக்கமாம்!

கொழும்பு, டிச. 06

அரசாங்கத்தினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கியமை தொடர்பிலான விவரங்களுக்கு அடுத்த வார இறுதியில் விரிவான விளக்கத்தை முன்வைக்கவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் 361 மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் அவைத் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் வெளியிட்ட விவரங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இந்த விளக்கத்தை முன்வைக்கவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-12)

## 90 சதவீதத்தால் குறைந்த சிதறு தேங்காய் வழிபாடு!

பக்தர்கள் கதிர்காமம் விகாரைக்கு முன்பாக சிதறு தேங்காய் உடைப்பது 90 வீதத்தால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கதிர்காமத்திற்கு வழிபடச் செல்லும் பல பக்தர்கள், பூஜை பொருட்களுடன் சிதறு தேங்காய் உடைக்க மறக்க மாட்டார்கள்.

கதிர்காமத்திற்குச் சென்று சிதறு தேங்காய் உடைக்காதவர்கள் இல்லை என்றே கூறலாம்.

எவ்வாறாயினும், நாட்டில் தற்போது தேங்காய்களின் விலை உயர்வைக் கருத்திற் கொண்டு பக்தர்கள் சிதறு தேங்காய் உடைப்பதைத் தவிர்த்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

தற்போது கதிர்காமம் பிரதேசத்தில் தேங்காய் ஒன்று 160 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

தேங்காய் தட்டுப்பாடு காரணமாக தேங்காய் எண்ணெயின் விலையும் அதிகரித்துள்ளதாகவும், சமய ஸ்தலங்களில் விளக்கு ஏற்றுவதும் குறைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

பக்தர்கள் தேங்காய்க்குப் பதிலாக செவ்விளநீரை வைப்பதாக செல்ல கதிர்காம நதியில் உள்ள விநாயகர் ஆலயத்தின் பூஜகர் ஜனக திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்குடன் பொலிஸ் மா அதிபரின் எண்ணக் கருவுக்கமைய பொலிஸ் நிலையங்களை 5 எஸ் திட்டத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கில் வடமாகாணத்தின் முதலாவது பொலிஸ் நிலையமாக கிளிநொச்சி மாவட்டம், பளை பொலிஸ் நிலையம் இன்று திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் சி.ஏ.தனபால பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இதனைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமந்த டீசில்வா, கிளி நொச்சி பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் உப்புல் செனவரத்ன, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் பளை பிரதேச கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# விவசாயிகள் மீது தாக்குதல்

## - டெல்லியில் பரபரப்பு -



டெல்லியை நோக்கி பேரணியாக சென்ற விவசாயிகளின் மீது கண்ணீர் புகைகுண்டு வீசப்பட்ட சம்பவம் சற்று முன் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது .

விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கோரி, ஹரியானா மற்றும் பஞ்சாபை சேர்ந்த விவசாயிகள் பேரணியாக டெல்லி நோக்கி சென்று கொண்டிருந்த நிலையில் டெல்லி எல்லையில் உள்ள ஷாம்பு பகுதியில் போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து தடுப்புகளை மீறி செல்ல முயன்ற விவசாயிகளின் மீது போலீசார் கண்ணீர் புகைகுண்டுகளை வீசியதால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதேவேளை , விவசாயிகளின் இயக்கங்களை போலீசார் ட்ரோன் மூலம் கண்காணித்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து பேச மத்திய அரசு தயாராக இருப்பதாக மத்திய அமைச்சர் பகீரத் சவுத்ரி அறிவித்துள்ளார்.

# அதானி முதலமைச்சர் சந்திப்பு தொடர்பில் அமைச்சர் செந்தில் பாலாஜி அறிக்கை!



தொழிலதிபர் அதானியை தமிழக முதலமைச்சர் சந்தித்ததாகவும், அதானியிடமிருந்து அதிக விலையில் சூரிய மின்சாரம் வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும் எதிர்க்கட்சிகள் மற்றும் ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் கட்டுக்கதைகள் பரப்பப்பட்டு வரும் நிலையில் இது தொடர்பாக கண்டனம் தெரிவிப்பதாக அமைச்சர் செந்தில் பாலாஜி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அதானியை சந்திக்கவில்லை, அதானி நிறுவனத்துடன் நேரடியாக சூரிய மின்சாரம் பெற எந்தவிதமான ஒப்பந்தமும் செய்யப்படவில்லை என்பதை இதன் மூலம் தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க ஆட்சி காலத்தில் நிர்வாகத்திலும், நிதி நிலைமையிலும் சீர்குலைந்திருந்த தமிழ்நாடு மின்சார வாரியத்தை, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நிர்வாக சீர்திருத்தங்களின் மூலம் இன்று ஆற்றல் நிரம்பிய நிறுவனமாக மாற்றியவர் தமிழக முதலமைச்சர் எனவும் இதனை எதிர்கொள்ள முடியாமல், அடிப்படை உண்மை இல்லை என்றே கூறக்கூடிய பொய்க் குற்றச்சாட்டுகளை பரப்புவது எதிர்க்கட்சிகளின் செயல்பாடாக மாறியுள்ளது எனவும் இவ்வறிக்கை மூலம் தெளிவு படுத்துவதோடு இது அரசியல் பண்பாட்டுக்கு பொருத்தமற்ற செயலாகும் என்பதையும் விளக்கியுள்ளார்.

# டெல்லியில் பிரீமியம் சேவையாக மாறிய சுத்தமான காற்று!



கடந்த சில நாட்களாக டெல்லியில் காற்றின் தரம் மோசமடைந்து, மக்கள் சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ள சூழல் ஏற்படுத்தியுள்ளது. காற்று தரக் குறியீடு பல மடங்கு அதிகரித்ததை அடுத்து, பள்ளிகளில் நிகழ்நிலை வகுப்புகள் நடத்தப்பட்டதோடு பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், டெல்லியின் சில 5 நட்சத்திர ஓட்டல்களில் “சுத்தமான காற்று சேவை” விற்கப்படுவதாக சமூக வலைதளங்களில் பரவும் தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் முதலீட்டாளராக பணிபுரியும் இந்திய இன்ஜினீயர் டெபர்கியா தாஸ், டெல்லி தாஜ் ஓட்டலில் எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். அந்த புகைப் படத்தில், அவரது விருந்தினர் அறையில் காற்று தரக்குறியீடு 58 எனக் காணப்பட்டது, அதே சமயம் டெல்லியின் பொது காற்றின் தரக்குறியீடு 397 வரை அதிகரித்திருந்தது.

இந்த தகவல் வைரலாக பரவியதால், “சுத்தமான காற்று” ஒரு பிரீமியம் சேவையாக மாறிவிட்டது, மற்றும் அது குறைந்தோர் மட்டும் அணுகக்கூடியதாக உள்ளதென சமூக வலைதள பயனர்கள் விமர்சித்து வருகின்றனர். இதனால், டெபர்கியா தாஸின் பதிவு இணையத்தில் விவாதத்தை தூண்டி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருப்பூர் முழுவதும் தீவிரப்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள்!



பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி எவ்வித அசம்பாவிதங்களும் நிகழாமல் இருக்க ஆண்டுதோறும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அந்த வகையில், திருப்பூரில் இன்று பல்வேறு இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் ரெயில் நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில், பயணிகள் மற்றும் அவர்களின் உடமைகளை போலீசார் நவீன கருவிகளின் மூலம் பரிசோதனை செய்த பின்னரே அனுமதி அளிக்கப்பட்டது. வெடிகுண்டு கண்டறியும் கருவிகளுடன், மெட்டல் டிடெக்டர்களை பயன்படுத்தி ரெயில் நிலையம் மற்றும் பார்சல் குடோன்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் லட்சுமி உத்தரவின் பேரில், மாநகரம் முழுவதும் நேற்று இரவு முதல் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கோவில்கள், மசூதிகள், பேருந்து நிலையங்கள் போன்ற முக்கிய பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

22 ரோந்து வாகனங்கள் 24 மணி நேரமும் நகரமுழுவதும் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளன. திருப்பூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அபிஷேக் குப்தா உத்தரவின் கீழ், மாவட்டம் முழுவதும் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால், பொது மக்கள் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இயங்க உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பசியற்ற உலகம் செய்வோம்!



இன்றைய பொருளாதார சூழ்நிலையில் உணவுப் பாதுகாப்பு என்பது உலகளாவிய பிரச்சினையாக இருக்கிறது. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப எல்லோருக்கும் உணவு தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். முக்கியமாக வளரும் நாடுகளில் உணவு பாதுகாப்பு என்பது தலையாயப் பிரச்சினையாக உள்ளது.

1940களில் உணவு உற்பத்தி மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. 1960களில் பசுமைப் புரட்சி வந்த பின்பும் உணவு உற்பத்தி பெருகிய அளவுக்கு, மக்களின் வாங்கும் சக்தி உயரவில்லை. சுதந்திரத்திற்கு முன்பும், பின்பும் உணவுப் பாதுகாப்பு என்பது சவாலாகத்தான் இருந்து வருகிறது. இதன் முக்கியத்துவம் கருதியே அன்றே “தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்” என்றார் பாரதி. உணவு என்பது மனிதன் உயிர் வாழ உட்கொள்ளும் அனைத்து உணவுகளும் அடங்கியது.

தானிய வகைகள், பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள், மாமிச உணவுகள் மட்டுமின்றி, சுத்தமான நீரும் காற்றும் கிடைக்கப் பெறுதல் வேண்டும். உணவு மனிதனின் அடிப்படைத் தேவையாக இருக்கிறது. ஒரு மனிதனுக்கு உணவு தேவை பூர்த்தி அடையாத போது மற்ற தேவைகள் உருவாகுவதில்லை. இந்த உணவு ஊட்டச்சத்து மிக்கதாகவும், சரிவிகித உணவாகவும் கிடைக்கப் பெறுதல் வேண்டும். உடல் இயக்கத்திற்கும் ஆரோக்கியமுடன் வாழ்வதற்கும் ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு 2400 கலோரி அளவுக்கு மேல் கிடைக்கப் பெறுதல் வேண்டும்.

இந்த உணவு சத்தானதாகவும் போதுமானதாகவும் எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் கிடைக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. கடுமையான மழை, இயற்கை சீற்ற காலங்கள் உணவு பாதுகாப்பிற்கு மிக பெரிய சவாலாக இருக்கிறது. அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளது. அதற்கேற்ப அமைப்புசாரா தொழிலாளர்களின் ஊதியம் உயரவில்லை. உணவு அல்லாத பண்டங்களுக்கான தேவை, பயன்பாடு பன்மடங்கு பெருகி



## உணவுக்கான உரிமையும் மக்களின் கடமையும்

வருகிறது. களனியை விட கணணியின் தேவை உயர்ந்து வருவதை பார்க்கலாம். முக்கியமாக கம்ப்யூட்டர், மொபைல் போன் பயன்பாடு அதிகரித்து வருகிறது. ஒருவேளை உணவு இல்லாமல் இருந்து விடலாம். ஒரு நாள் மொபைல் போன் பயன்பாடு இல்லாமல் இருக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

சுவர் இருந்தால்தானே சித்திரங்கள் வரைய முடியும். நல்ல உடல் ஆரோக்கியம் இருந்தால் தானே மற்ற விஷயங்களை அனுபவிக்க முடியும்.

இன்றைய மருத்துவ வசதிகள் மனித உயிரை காப்பாற்றுவதற்கு போதுமானதாக இருக்கலாம். ஆனால் மனிதன் ஆரோக்கியத்தோடு வாழ்வதற்கு நல்ல சத்தான உணவு மிக அவசியம். ஊட்டச்சத்து மிக்க உணவுகள் எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் எளிதில் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். சமூக பாதுகாப்பு திட்டங்கள் முதியோர்க்கு மாற்றுத் திறனாளிகளுக்கு இருந்தாலும் அவர்களுக்கு உணவு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். போதுமான வருமானம் இருந்தும் உணவு சிலருக்கு கிடைப்பதில்லை உணவு இருந்தும் வாங்கி சாப்பிட போதுமான பணம் இருப்பதில்லை வருமானமும் உணவும் கிடைத்தாலும் அதனை வாங்கி உட்கொள்வதற்கும் உடல் ஏற்கும் திறனும், சுகாதார வசதிகளும் பெருக வேண்டும்.

மனிதனின் உடல் ஆரோக்கியத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதை உலக பசி குறியீட்டு எண் உறுதிப்படுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் உலக பசி நிலையை அறிந்து கொள்ள உலகப் பசி குறியீட்டெண் ஆய்வு அறிக்கை வெளியிடப்படுகிறது. இதனை மதிப்பீடு செய்வதில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் எடை, உடல் ஆரோக்கியம், உடல் உயரத்திற்கு ஏற்ப எடை, வயதிற்கு ஏற்ப உயரம் போன்றவை முக்கிய அளவுகோல்களாக உள்ளன.

மறைமுக பசி (Hidden Hunger) நிலை உயர்ந்து வருகிறது என்பது உண்மை. அதாவது மனிதனுக்கு தேவையான சில நுண்ணூட்ட சத்துக்கள் தொடர்ந்து கிடைக்கப் பெறாத நிலை அதிகரித்து வருகிறது. ஒரு சில சத்துக்கள் கிடைக்கக்கூடிய உணவு பண்டங்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இந்நிலை மாற வேண்டும்.

ஒரு நாட்டின் உணவு பாதுகாப்பை பல்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றன. அதாவது வேளாண் உற்பத்தி, காலநிலை வணிகம், ஏற்றுமதி இறக்குமதி, மழை, வருமானம், வேளாண் உற்பத்தி, உணவு தரம், சுகாதாரமான தண்ணீர் சுற்றுப்புறச் சூழல், அரசின் நிர்வாகம் அரசியல் நிலைப்பு தன்மை சமூக கட்டமைப்பு போன்ற பல காரணிகள் உள்ளன.

(07ஆம் பக்கம் பார்க்க)



“ஒரு நாட்டின் உணவு பாதுகாப்பை பல்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றன. அதாவது வேளாண் உற்பத்தி, கால நிலை வணிகம், ஏற்றுமதி இறக்குமதி, மழை, வருமானம், வேளாண் உற்பத்தி, உணவு தரம், சுகாதாரமான தண்ணீர் சுற்றுப் புறச் சூழல், அரசின் நிர்வாகம் அரசியல் நிலைப்பு தன்மை சமூக கட்டமைப்பு போன்ற பல காரணிகள் உள்ளன”

# வங்காளத்தில இந்திய சேலையை எரித்து அரசியல் கட்சியினர் போராட்டம்!



வங்காளதேசத்தில் இஸ்கான் முன்னாள் உறுப்பினராக இருந்த சின்மோய் கிருஷ்ண தாஸ், ஒரு இந்து பேரணியில் பங்கேற்றார். இதன்போது , வங்காளதேச தேசிய கொடியை அவமதித்ததாக கூறப்படும் தேச துரோக குற்றச்சாட்டின் அடிப்படையில், அவர் கடந்த 25 ஆம் தேதி கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, வங்காளதேசத்தில் சிறுபான்மையினரான இந்துக்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இந்து கோவில்கள், கடைகள், வீடுகள், மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீது வன்முறை நடத்தப்பட்டு, சில இடங்களில் சொத்துகள் சூறையாடப்பட்டன. பலர் காயமடைந்துள்ளதுடன், சொத்துகளுக்கு தீ வைத்து அழித்த சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இதனால் பதற்றமான சூழல் உருவாகியுள்ள நிலையில், வங்காளதேச தேசியவாத கட்சியினர், இந்திய தயாரிப்பு பொருட்களை புறக்கணிக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டங்கள், வங்காளதேச தேசிய கொடியை அவமதித்ததற்கும், அகர்தலா நகரில் உள்ள வங்காளதேச துணை தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் எதிராக நடைபெற்றன.


ஆர்ப்பாட்டக்காரர்கள், “உள்ளூர் தயாரிப்புகளை வாங்குங்கள்” என்ற பேனர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். BNP கட்சியின் மூத்த இணை பொது செயலாளரான ருஹுல் கபீர் ரிஸ்வி, ஆர்ப்பாட்டத்தின் போது இந்தியாவுக்கு எதிராக குரல் கொடுத்தார். மேலும், தனது மனைவியின் இந்திய சேலையை எரித்து இந்திய தயாரிப்புகளை புறக்கணிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில், ரிஸ்வி, “எங்களுடைய தேசிய கொடியை அவமதித்துள்ளனர். அதனால், இந்தியாவின் எந்த பொருட்களையும் நாங்கள் வாங்கமாட்டோம். இந்திய சேலைகள், சோப்புகள், பற்பசை உள்ளிட்ட பொருட்களை பெண்கள் கூட வாங்கக் கூடாது,” எனக் கூறினார்.

இதைத் தொடர்ந்து, வங்காளதேசத்தில் இருந்து அதிகளவில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி, வெங்காயம், கோதுமை மற்றும் ஆலைகளுக்கான மூலப்பொருட்களை புறக்கணிக்கப் போவதாக கட்சி தெரிவித்தது.

# கலிபோர்னியாவை உலுக்கிய சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## சுனாமி எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டதால் மக்கள் நிம்மதி



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் நேற்று நள்ளிரவில் 7.0 ரிக்டர் அளவிலான கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் தகவலின் படி, இந்த நிலநடுக்கம் பெர்ண்டேல் நகருக்கு மேற்கு-தென்மேற்கில் 100 கிலோமீட்டர் தொலைவில், கடலுக்கடியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

இந்த நிலநடுக்கத்தால் பல பகுதிகளில் கட்டிடங்கள் குலுங்கியன. கடைகளில் உள்ள பொருட்கள் அலமாரிகளிலிருந்து கீழே விழுந்தன. பல குடியிருப்புகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நிலநடுக்கத்தின் பயத்தில் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளிக்குதித்து, வீதிகளில் திரண்டனர். மேலும், சில இடங்களில் கட்டிடங்கள் சேதமடைந்தன.

7.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தின் தீவிரத்தால், மையப்பகுதியிலிருந்து 300 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வடக்கு கடலோரப் பகுதிகளில் சுனாமி அபாயம் ஏற்பட்டுவிடும் என சுனாமி எச்சரிக்கை மையம் அறிவித்தது. இதையடுத்து, அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு, மீட்புக் குழுக்களை தயார் நிலையில் வைத்தனர். நிலநடுக்கத்தால் ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்ய அவசரகால நிலையை கலிபோர்னியா கவர்னர் கவின் நியூசோம் அறிவித்தார்.

90 நிமிடங்கள் கழித்து, சுனாமி அபாயம் குறைந்ததால், எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டது. இதனால் பொதுமக்களும் அதிகாரிகளும் நிம்மதி அடைந்தனர்.

சுனாமி எச்சரிக்கையின் போது, பெர்க்லியில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அச்சுறுத்தல் குறைந்த பிறகு, மக்கள் இடமாற்றம் செய்யப்படவில்லை. மெண்டோசினோ கவுண்டியில், நிலைமையைப் பொருத்து எச்சரிக்கைகள் மாற்றப்பட்டன.

# எட்டு பயங்கரவாதிகள் சுட்டு கொலை பாகிஸ்தானில் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு



பாகிஸ்தானின் கைபர் பக்துன் குவா மாகாணத்தின் சவுத் வசீரிஸ்தான் மற்றும் லக்கி மார்வாத் மாவட்டங்களில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்த ரகசிய தகவலின் அடிப்படையில், பாதுகாப்பு படைகள் தனித்தனியாக சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டன.


சவுத் வசீரிஸ்தானில் உள்ள சாராரோகா பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில், பயங்கரவாதி தலைவராக இருந்த கான் முகமது என்ற கோரியாய் உள்ளிட்ட இரண்டு பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதேபோல், லக்கி மார்வாத் பகுதியில் மேற்கொண்ட மற்றொரு சோதனையில் ஆறு பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேலும், இரண்டு பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர், அவர்களில் ஒருவரான கான் முகமது, மிரட்டி பணம் பறித்தல் மற்றும் படுகொலைகளில் ஈடுபட்டவராக அடையாளம் காணப்பட்டார். அவரை பிடிக்க உதவியவருக்கு ரூ.10 லட்சம் பரிசாக வழங்கப்படும் என அரசாங்கம் முன்பே அறிவித்திருந்தது.

பாகிஸ்தானில் கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 68 ராணுவ அதிகாரிகள் மற்றும் 127 பயங்கரவாதிகள் உள்பட மொத்தம் 245 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டில் அமைதியை நிலைநிறுத்த பாதுகாப்பு படைகள் தங்கள் முயற்சிகளை உறுதியுடன் தொடர்கின்றன என ராணுவ ஊடக பிரிவு தகவல் தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவில் மதுபோதையில் விளையாடிய காதலன் மரணம்

## சிறைக்கு சென்ற காதலி!



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஓர்லாண்டோ நகரை சேர்ந்த சாரா பூன் (47) மற்றும் அவரது காதலர் ஜார்ஜ் டோரஸ் (42) 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் தேதி வீட்டில் கண்ணாமூச்சி விளையாடினர். இருவரும் அதே நேரத்தில் அதிக மதுபோதையில் இருந்தனர்.

விளையாட்டின்போது, சாரா, தனது காதலரை ஒரு சூட்கேசுக்குள் வைத்து பூட்டினார். பின்னர், அவர் தாமாகவே சூட்கேசிலிருந்து வெளியே வருவார் என்று நினைத்து தூங்கச் சென்றுவிட்டார். மறுநாள் காலை எழுந்த பின்னர், ஜார்ஜ் சூட்கேசுக்குள் இருப்பது நினைவுக்கு வந்து அதிர்ச்சியடைந்தார். உடனே சூட்கேசை திறந்த போது, ஜார்ஜ் டோரஸ் மூச்சுத் திணறலால் உயிரிழந்திருந்தது தெரியவந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக சாராவை கைது செய்த போலீசார், அவரது மீதான கொலை வழக்கை பதிவு செய்தனர். கடந்த நான்கு ஆண்டுகளாக வழக்கு தொடர்ந்த நிலையில், இறுதி விசாரணை அண்மையில் நடைபெற்றது. இதில் சாரா மீதான குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபிக்கப்பட்டதையடுத்து நீதிபதி சாராவுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## முதலீட்டு வாய்ப்பில் இனி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து உரையாற்றிய அவர், "நாங்கள் எதிர்க்கட்சி என்ற பெயருடன் அமர்ந்துள்ளோம். ஆனாலும் அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து முற்போக்கான செயற்பாடுகளுக்கும் நாம் உங்களுடன் இருப்போம். சிறுபராயத்தில் இருந்தே ஆட்சியாளர்களுக்கு எதிரான மனநிலையுடன் வளர்ந்தவர்கள் நாங்கள்.

எனது தந்தை ஒரு பொதுநலவாதி, அவர் தனது வாழ்க்கை முழுவதும் தூய்மையான கம்யூனிசவாதியாக வாழ்ந்தவர். நான் அவரது வளர்ப்பில் வந்ததால் இன,மத, குல வேறுபாடு எனக்கில்லை. ஆனால் நாம் இந்த நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையானவர்கள் அனைத்து விதத்திலும் ஏனைய மக்களுடன் சமனாக நடத்தைப்படவில்லை என்ற எண்ணத்துடன் வளர்ந்தவர்கள்.

அதனாலோ என்னவோ எமது நாட்டின் தேசியகீதத்தையும், தேசியக்கொடியையும் நாங்கள் மனதார விரும்பவில்லை, ஆனால் மதிப்பளிக்கின்றோம். இந்த மனநிலை எனக்கு மட்டுமல்ல எனது வயதையொட்டிய இன்னும் பல ஆயிரக் கணக்கனவர்களுக்கு உள்ளது. ஆனால் அதை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலை ஏற்பட்டதையிட்டு பல சந்தர்ப்பங்களில் நான் மனவேதனை அடைந்துள்ளேன்.

நாம் விரும்பும் தேசிய கீதத்தையும், நாம் விரும்பும் தேசியக் கொடியையும் எனது வாழ்க்கைக் காலத்துக்குள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு இந்த அரசினுடையது. நான் சொல்ல விழையும் விடயத்தை நீங்கள் அனைவரும் புரிந்திருப்பீர்கள் என எண்ணுகிறேன்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தனது உரையில் சமாதானம் ஒவ்வொருவருடைய மனதிலும் இருந்து தொடங்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். அது, உண்மை, ஆனால் அதை எங்கிருந்து தொடங்கலாம் என்று சிந்தித்தால் அது உங்கள் பக்கத்திலிருந்து தான் தொடங்க வேண்டும் என நான் நினைக்கிறேன்.

யுத்தத்தால் இறந்த உறவுகளை வணங்கும் நினைவேந்தலுக்கு நீங்கள் தடை போடவில்லை, அது உங்கள் நல்லெண்ணத்தை காட்டுகிறது. அதே நேரம் பல நூற்றுக்கணக்கான இறந்தவர்களின் உடல் புதைக்கப்பட்ட துயிலும் இல்லத்தில் இன்று இராணுவ முகாம் உள்ளது, இவ்விடத்தை விடுவிக்க நடவடிக்கை எடுத்து நல்லெண்ணத்தை காட்டுங்கள்.

அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யுங்கள். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கு மனச்சாட்சியுடன் விடையை தேடுங்கள், அதனூடாக உங்கள் நல்லெண்ணத்தை காட்டுங்கள்.

மகாவலி - எல் வலயத்தில் மூவின மக்களிற்கும் காணிகளை பகிர்ந்தளியுங்கள். ஜனாதிபதி தலைமையில் வரும் அரசாங்கம் நாட்டில் காணப்படும் இரு முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் என்ற நம்பிக்கையில் தான் நாங்களும் இருக்கிறோம்.

முதலாவதாக, இந்த நாட்டில் காணப்படும் அரசியல் பிரச்சனைக்கான தீர்வு, இரண்டாவதாக பொருளாதார பிரச்சனைக்கான தீர்வு. முதலாவது பிரச்சனைக்கு தீர்வுகாணாமல் இரண்டாவதற்கு முழுமையான தீர்வொன்றை காணமுடியாது.

ஜனாதிபதி தனது உரையில் அரசியல் தீர்வு தொடர்பாகப பேசவில்லை என எமது உறுப்பினர்கள் சொன்னாலும், இரு தினங்களுக்கு முன்னர் நாம் அவரைச் சந்தித்தபோது அரசியல் தீர்வு விடயத்தில் தனது நேர்மையான நல்லென்னத்தை வெளிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சி க்காலத்தில் புதிய அரசியல் யாப்பின் வரைபு தயாரிக்கப்பட்ட போது வழிநடத்தல் குழுவில் இருந்து மக்கள் விடுதலை முன்னணியினர் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர். அந்த முயற்சி தொடரவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுடன் சேர்ந்து முன்செல்ல நாங்கள் தயாராகவே உள்ளோம். பொருளாதாரப் பிரச்சனை ஏற்படக் காரணம், நாட்டில் இடம்பெற்ற யுத்தம், நாட்டின் வளங்களையும் இந்த நாட்டுக்கு உள்ள சந்தர்ப்பங்களையும் பிரதிபலிக்கும் பொருளாதாரக் கொள்கை இன்மையுமாகும்.

ஆட்சியாளர்களினதும் சகபாடிகளினதும் ஊழல், துஸ்பிரயோகம், வீண் விரயம் யுத்தம் முடிவுக்கு வந்து 15 வருடங்களாகிவிட்டது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மொத்தத் தேசிய வருமானத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பு எவ்வளவு?

இன்று எமது மக்களின் பொருளாதாரம் மிக நலிவடைந்துள்ளது. 15,000 மேற்பட்ட முன்னாள் போராளிகள், 75,000 விசேட தேவைகள் உள்ள மக்கள், பெண் தலைமைத்துவகுடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தைகளை இழந்த பெற்றோர்கள் என சமூகத்தில் 1ஃ3 பகுதியினர் ஏனைய வர்களின் உதவியின்றி சுயமாக எழுந்து நிற்க முடியாதவர்கள். எனவே வடக்கு- கிழக்கு மாகாணங்களில் விசேட பொருளாதார மீட்சித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது. அதற்கான முயற்சியில் உங்களுக்கு கைகொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

தொடர்ந்தும் நிவாரணத்தை நம்பி வாழும்கு மற்றவர்களில் தங்கி வாழும் சமூகத்தை உருவாக்கதீர்கள். அரசாங்கத்தாலும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்களை ஆராய்ந்து பாருங்கள். அவற்றில் வெற்றியடைந்த திட்டங்கள் எத்தனை?. தமது சொந்த உழைப்பில் வாழும் சமூகத்தை கட்டியெழுப்ப பொருளாதார திட்டங்களைத் தீட்டுங்கள்

பாழடைந்த குளங்களை புனருத்தாரணம் செய்து விவசாயக் காணியற்ற குடும்பங்களிற்கு குறைந்தது 2 ஏக்கர் வயல் காணிகளை வழங்குங்கள். இவ்வாறான திட்டங்கள் வெற்றியடைய நாமும் உங்களுடன் சேர்ந்து உழைக்க ஆயத்தமாக உள்ளோம்.

சர்வதேச சட்டத்திற்கு முரணாக ஆட்கடத்தல்காரர்களால் கடத்திச் செல்லப்பட்டு ரஸ்ய ராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை விடுவித்து தருமாறும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த அவர்களது உறவுகள் கோரிக்கை விட்டுள்ளார்கள். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பிலும் சில வார்த்தைகள் சொல்ல எண்ணுகிறேன். திட்டமிடப்படாத கட்டுமானங்களும், வடிகால் அமைப்பு சீரின்மையும் அனுமதியற்ற கட்டிட நிர்மானங்களும் வெள்ளமேற்பட முக்கிய காரணங்களாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதையும் இங்கும் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டுள்ளேன்.

இறுதியாக, நாங்கள் இந்த நாட்டின் பூர்வ குடியாக, ஒரு தேசிய இனமாக எங்களின் அடையாளங்களை பேணிக் கொண்டு ஒரு பன்முகத்தன்மை உள்ள வளமான நாட்டை கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம்" என தெரிவித்தார். (ஐ-05)

## 'பார் பெமிட்' .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதியளித்த நீதியரசர்கள் குழாம், மதுபான அனுமதிப்பத்திரத்துக்கான வருடாந்தக் கட்டணத்தை அதிகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தனர்.

இலங்கை மதுபான விற்பனை உரிமையாளர்கள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் பிரதிவாதிகளாக நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1/2024 ஊடாக மதுபான அனுமதிப்பத்திரத்துக்கான வருடாந்தக் கட்டணத்தை ரூபா 20 மில்லியனாக உயர்த்தியதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த வருடாந்த அனுமதிப்பத்திர கட்டண உயர்வினால் தமக்குப் பாரிய அநீதி ஏற்பட்டுள்ளதாகவும், தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறு கோரி இலங்கை மதுபான விற்பனை உரிமையாளர்கள் சங்கத்தினர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

மேலும், 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட உத்தரவிட வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (ஐ-05)

## கோபா குழுவின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அவ்வாறான விசாரணைகளுக்கு கடந்த அரசாங்கத்தைப் பிரதிநித்துவப்படுத்திய அமைச்சர் ஒருவரை கோப் குழுவின் தலைவராக நியமிப்பதனை நாங்கள் விரும்பவில்லை என்று குறிப்பிட்டார். (ஐ)

## பசியற்ற உலகம் .....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே ஒரு குறிப்பிட்ட காரணி மட்டும் உணவு பாதுகாப்பை உறுதி செய்து விடாது. இதன் பின்னணியை தெரிந்து கொள்வோம். உணவு பாதுகாப்பின் அவசியம் கருதி 1996 ஆம் ஆண்டு ரோம் நகரில் ஐநா சபையின் சார்பில் உலக உச்சி மாநாடு நடைபெற்றது. பட்டினி அல்லது பஞ்சம் என்ற அச்சுறுத்தலில் மக்கள் வாழ வேண்டிய அவசியம் இருக்காது என்பதுதான் இம் நாட்டில் கொண்டு வரப்பட்ட உணவு பாதுகாப்பிற்கான தீர்மானம். உணவு பாதுகாப்பு என்பது நான்கு முக்கிய அம்சங்களை கொண்டதாகும். அவை உணவு இருப்பு: அதாவது, இது நாட்டின் வேளாண்மை உற்பத்தி உணவு தானிய இருப்பு இறக்குமதி சம்பந்தப்பட்டவை, உணவை அணுகும் திறன்: இது மக்களின் வாங்கும் சக்தி, வேலைவாய்ப்பு சம்பந்தமானதாகும்,உணவை உடல் ஏற்கும் திறன்: இது தூய்மையான குடிநீர், மற்றும் சுகாதார வசதி சார்ந்ததாகும்.

உணவு பாதுகாப்பில் வேளாண்மை, கால்நடைத்துறை, மீன்வளம் முக்கிய பங்காற்றுகின்றது. நம் நாட்டில் நிலவளம், நீர் வளம், மனித வளம் போதுமானதாக இருந்தும் உணவு பாதுகாப்பில் முன்னேற்றம் அடைய வேண்டிய நிலையில் உள்ளோம். உடல் ஆரோக்கியம் இருந்தால் மட்டுமே உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அந்த உடல் ஆரோக்கியத்திற்கு உணவு, உறக்கம்,உடல் உழைப்பு மிக அவசியமாகும். அதற்கான சூழ்நிலை உருவாக வேண்டும்.

தனிக் குடும்ப கலாச்சாரங்கள் பெருகி வருவதால் சமூக அளவிலான உணவு பாதுகாப்பு பிரச்சனையும் அதிகரித்து வருகிறது என்று சொல்லலாம். பெரிய மாளிகை வீடுகளில் பணம் இருந்தும் உணவு இல்லாமல் கவனிக்க ஆள் இல்லாமல் சிரமப்படும் முதியோர் பலர் இருக்கின்றனர். சமூக விழாக்கள் சில நேரங்களில் உணவு பாதுகாப்பை உறுதி செய்கின்றன. இன்றும் கோயில்களில் அன்னதான திட்டம் பலருக்கு உணவு பாதுகாப்பை உறுதி செய்கிறது. கிடைக்கும் உணவை பகிர்ந்து உண்ணும் பழக்கமும் மனிதர்களிடம் வளர வேண்டி உள்ளது. தேவைக்கு மிகுதியான சத்துக்களை தொடர்ந்து உட்கொள்வதால் உடல் பருமனும், உடல் தேவை கேட்பது சில சத்துக்கள் கிடைக்காமல் சத்து குறைவும் ஏற்படுகிறது. உணவு சார்ந்த விழிப்புணர்வு பெருக வேண்டும். உணவு பாதுகாப்பின் அவசியம் பற்றி அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். குடும்ப அளவிலான உணவுப் பொருளாதாரம் சமூகப் பொறுப்பாக மாற வேண்டும்.

உணவு என்பது மனிதனின் அடிப்படை உரிமை. அந்த உரிமையை பாதுகாப்பதில் அரசிற்கு மட்டுமல்லாமல், நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் சமூக பொறுப்பு உண்டு. அரசின் திட்டங்களை சரியாக முழுமையாக பயன்படுத்தலாம். வீடுகளில் மாடித் தோட்டம் அமைத்து வீட்டுக்கு தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்யலாம். உணவுக்கான செலவை குறைக்கலாம். உணவை வீணாக்காமல், எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் சத்தான போதுமான உணவு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவோம். பசியில்லா ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவோம்.

## மாடியில் இருந்து விழுந்த ஆஸ்திரேலியர் மரணம்!

கொழும்பு, டிச. 06

அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் மாடியில் இருந்து குதித்து வெளிநாட்டவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றிலேயே இந்தச் சம்பவம் கடந்த 3ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில், 51 வயதுடைய ஆஸ்திரேலியப் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், அவர் ஒருவித மன நோயால் பாதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அடுக்குமாடி குடியிருப்பில் வசித்த அந்த நபர் 7வது மாடியில் இருந்து கீழே குதிக்க முயல்வதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று அந்த இடத்திற்கு சென்று அவரை தடுக்க முற்பட்டுள்ளது. எனினும், பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கி விட்டு அவர் அங்கிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த வெளிநாட்டவர் தங்கியிருந்த இடத்தின் சொத்துக்களையும் அவர் சேதப்படுத்தியுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அரசியலமைப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் முன்மொழிய, அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்னம்பலம் கஜேந்திரகுமார் வழிமொழிந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் நாஜபக்சவும், ரவி கருணாநாயக்கவும் முன்மொழிந்து, வழிமொழிந்தார்கள்.

அதன் பின்னர் நடந்த வாக்கெடுப்பின் போது அளிக்கப்பட்ட 21 வாக்குகளில் சிவஞானம் சிறீதரன் 11 வாக்குகளையும், ஜீவன் தொண்டமான் 10 வாக்குகளையும் பெற்றனர். ஒரு வாக்கு வித்தியாசத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அரசியலமைப்பு பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்க கட்சி சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா அரசியலமைப்பு பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# உதவிச் செயலாளர் டொனால்ட் லூ அமைச்சர் விஜித ஹேரத் சந்திப்பு!





கொழும்பு, டிச.06
தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்புக் குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், "இலங்கையின் மீட்புக்கு முக்கிய பங்காற்றிய யுஎஸ்எயிட் மற்றும் அமெரிக்க திறைசேரி திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்துடன் சந்திப்பை மேற்கொண்டார்.

இதன்போது, இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் பொதுவான முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம். மேலும், இலங்கையின் மக்கள் நலனுக்காக பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை ஆதரிக்கத் தகுந்த திட்டங்கள், திறன் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் மூலம் நாம் இணைந்து செயல்படக்கூடிய வழிகளை இதன்போது ஆராய்ந்தோம்" என்று குறிப்பிட்டுள்ளார். (ஜ-12)

# ஊழியரைக் கொன்று விட்டு ரூபா 09 இலட்சம் கொள்ளை!

## - நுவரெலியாவில் சம்பவம் -



பொகவந்தலாவ, டிச. 06
இலங்கை போக்குவரத்து சபையின் நுவரெலியா டிப்போவில் கடமையாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தரை கொலை செய்து விட்டு வங்கியில் வைப்பிலிடுவதற்காக அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த இருந்த சுமார் ரூபா ஒன்பது இலட்சம் கொள்ளையிடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

டிப்போவில் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றிய நுவரெலியா கல்பாய பிரதேசத்தை சேர்ந்த 85 வயதான கே. லோகேஸ்வரன் என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

பாதுகாப்பு அறையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கிக் கொன்றுவிட்டு டிப்போவில் இருந்த அலுமாரியில் இருந்து பணத்தை எடுத்துச் சென்றுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்தின் போது, டிப்போவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரும், காசாளரும் டிப்போவில் தங்கியிருந்த போதிலும், அவர்கள் உறங்கிக்கொண்டிருந்த வேளையில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் சேவையில் ஈடுபட்ட பஸ்களின் வருமானம் வங்கியில் வைப்பிலிடுவதற்காக அலுமாரியில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்தப் பணமே கொள்ளையிடப்பட்டுள்ளது என்றும் டிப்போவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)














பகவத்கீதையை உலகெலாம் எடுத்துச் செல்லும் கீதா அமிர்தானந்தஜீயும், ஐந்து மாதாஜீக்களும் இன்று வெள்ளிக்கிழமை காரைதீவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்தியா, திருநெல்வேலி மதுரை சாரதா ஆச்சிரம சன்னியாசிகளான சண்முக பிரியாம்பா, கதாதர பிரியாம்பா, நீலகண்ட பிரியாம்பா, சதாசிவ ப்ரியாம்பா, துர்கா பிரியாம்பா ஆகிய ஐந்து மாதாஜிகளும், கீதா அமிர்தானந்தஜீ மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 கீதா அன்பர்களும் இந்த விஜயத்தின் போது கலந்து கொண்டார்கள். **(படங்கள் :வி.ரி.சகாதேவராஜா)**







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2024 இல் வெளியிடப்பெற்றது.